விடைக்குறிப்பேடு

**தி.ஜ. மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, அமபததூர**
**அரையாண்டுத்தேர்வு – திசம்பர்–2018**

மதிப்பெண்: 100
வரிசை எண்:: ……………
நேரம்: 2.30 மணி

**(இலக்கணம், துணைப்பாடம்,கடிதம்,கட்டுரை, மொழிப்பயிற்சி)**
**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.**

**பிரிவு – I**
**(மதிப்பெண் : 20)**
**பகுதி –1**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. ‘மதுரையான்’ என்பது _____________ பெயர்ப்பகுபதம்.

(அ)பொருள் (ஆ)சினை
**(இ)இடம்** (ஈ)குணம்

2. பின்வருவனவற்றுள் ‘இயல்புப்புணர்ச்சி’

அ)மரவேல் ஆ)வாழைப்பழம்
**இ)பொன்வளையல்** ஈ)கற்கோட்டை

3. ‘நடி’ என்ற அடிச்சொல்லின் வினையெச்சம்.

(அ)நடித்தான் (ஆ)நடித்த
**(இ)நடித்து** (ஈ)நடித்தல்

4. மருதநிலத்திற்குரிய தெய்வம் _____________.

அ)முருகன் ஆ)திருமால் **இ) இந்திரன்** ஈ) சிவன்

5. ஒருதலைக் காமம் என்பது ______________.
அ) அன்பின் ஐந்திணை **ஆ) கைக்கிளை** இ) பெருந்திணை
ஈ) குறிஞ்சித்திணை

**பகுதி –2**

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5 x 1 = 5**

6. ‘நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது _**கொளல்**___வினாவாகும்.
7. ‘பவளவாய்’ என்பது உவமையா? உருவகமா?_ **உவமை** _____.
8. நிரைகவர்தல் என்பது _வெட்சித்திணை ஆகும்.
9. ‘சிற்றோடை’ என்பது எவ்வகைப் புணர்ச்சி _**பண்பு**______.
10. யாமம் என்பது இரவு 10 மணிமுதல் __**இரவு 2மணி**__ வரை ஆகும்.

**பகுதி –3**

**சுருக்கமாக விடையளி** **10 x 1 = 10**

11. அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி! ( எவ்வகைத் தொடர் என எழுதுக)
**உணர்ச்சித்தொடர்**
12. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக்
கண்டுபிடித்**தனர்** (ஒருமை பன்மை பிழை நீக்குக)

13. கீழ்க்காணும் தொடரில் உள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.

தமிழில் வரலாற்று***க்*** கருத்துகளையும் பண்பாட்டு***க்*** கூறுகளையும் காணமுடியும்.

14. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது - மரபுத்தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக. **மாணவர் சிந்தனைக்கு**

15. வல்லினம் மிகும் இடங்கள் இரண்டினை எழுதுக.

**மாணவர் சிந்தனைக்கு**

16. வாழ்ந்து, பெற்று - இச்சொற்களைப் பெயரெச்சமாக்குக.

**வாழ்ந்த, பெற்ற**

17. முப்பால் - தொகைச்சொல்லை விரித்து எழுதுக.

**அறம், பொருள், இன்பம்**

18. நாளை தலைவர் வருகிறார். **வருவார்**

(வாக்கியப் பிழையைத் திருத்தி எழுதுக)

19. நிலவும் வானும் போல - சொற்றொடரில் அமைத்து எழுதுக.

**மாணவர் சிந்தனைக்கு**

20. இனியவன் உணவு உண்டான் - **உண்டிலன்** எதிமறைத்தொடராக்குக.

**பிரிவு - II**

**(மதிப்பெண் : 10)**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு விடையளிக்க. 5 x 2 = 10**

21. முற்றெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

ஒரு வினைமுற்றுச் சொல் எச்சப்பொருளில் வந்து, மற்றொரு வினனமுற்றைக் கொண்டு முடிவது

விளக்கம்---1 1/2 ; சான்று-1/2

22. வல்லினம் மிகா இடங்கள் இரண்டினைக் கூறி விளக்குக.

**மாணவர் சிந்தனைக்கு**

23. வெற்றிலை - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

பிரித்தல் - 1/2 புணர்ச்சி விதி - 1 1/2

வெறுமை+இலை --- ஈறுபோதல் --- வெறு+இலை--- தன்னொற்று இரட்டல் --- வெற்று+இலை---- உயிர்வரின்...--- வெற்ற்+இலை--- உடல்மேல்...

24. கொணர்ந்தேன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக. கொணர்-பகுதி+த்-- சந்தி(ந்-ஆனது விகாரம்)+ஏன்- தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

25. முதற்பொருள் என்பது யாது? அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருள்.

விளக்கம்---1 1/2 ; சான்று-1/2

26.புறத்திணைகள் நான்கனை எழுதுக. ---2

27.ஒருபொருட்பன்மொழி என்றால் என்ன? சான்று தருக.
**ஒரு பொருள் குறித்து வரும் இரு சொற்கள்.**
விளக்கம்--1 1/2 ; சான்று-1/2

**பிரிவு - III**

**(மதிப்பெண் : 50)**

**பகுதி -1**

**கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 x 5 =10**

28. ஆய்தக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
விளக்கம் - 4
சான்று -1

29. பைந்தமிழ், தென்மேற்கு - புணர்ச்சி விதி காண்க.

பைந்தமிழ்== 2 1/2
பசுமை+தமிழ் --- ஈறுபோதல்---பசு+தமிழ்---அடி அகரம் ஐயாதல்---
பைசு+தமிழ்--- இனையவும்--- பை+தமிழ்--- இனமிகல் பைந்தமிழ்.

தென்மேற்கு ===2 1/2
தெற்கு+மேற்கு-- திசையொடு திசையும்...

30. மருத நிலத்திற்குரிய கருப்பொருள்களை வரிசைப்படுத்தி எழுதுக.
(10 மட்டும்)

**பகுதி -2**

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.** **2 x 5 =10**

செய்தி=3 1/2
உட்தலைப்பு=1/2
பத்தி பிரிப்பு=1/2
மொழிநடை=1/2

31. ‘குறட்டைஒலி’ கதையில் வரும் இருவேறு குடும்பங்களின்
இயல்பினை
விளக்குக.

32.பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்றினை விளக்குக.

33.அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**பகுதி -3**

34.**(அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச்சொற்களைத் தமிழாக்கம் செய்க.** **3 + 2 = 5**

“லைப்ரரிக்கிப் போயி புக் எடுக்கப் போறேன் நீயும் வர்றதா இருந்தா வா, ஐ டோண்ட் வொர்ரி. ஈவினிங் போகலாம்”.

**(ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.**

794, 326.

**35.(அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்க.**

**3 + 2 = 5**

----->தமிழாக்கம்-----2

மொழிநடை----1

This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firms, industrials, concerns and government departments, lot of information processing is required. The computer is the superfast information processing unit.

**(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

(i) Money makes many things.

பணம் பத்தும் செய்யும்

(ii) No rains no grains.

உழைப்பின்றி ஊதியமில்லை.

(iii) Art is long but life is short.

கல்வி கரையில கற்பவர் நாள் சில.

(iv) Practice makes perfect.

முயற்சி திருவினையாக்கும்.

**பகுதி -4**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 5**

**36.(அ) கீழே கொடுக்கப் பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.**

கண் தெரியாத ஒருவர், சாலையைக் கடக்க முயல்கிறார். அந்த நேரம் தூரத்திலிருந்து பேருந்து வருவதைப் பார்த்த மறு நிமிடம் ஐயோ என்ற சத்தம் ......( கதையைத் தொடர்க.)

(அல்லது)

**(ஆ)கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று வரைக.**

முயற்சி (அல்லது) மழை

பகுதி -5

37. **கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்தெழுதுக.** **5**

வீடு தோறும் கலையின் விளக்கம்
  வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
  நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததோர் ஊரைத்
  தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
  கேண்மை கொள்ள வழியினைக் கண்டீர்.

-பாரதியார்

**(சிந்தைக்கேற்ப)**

பகுதி -6

38. **கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை நிரப்புக.** **5**

பகுதி - 7

39. **(அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க. 3 + 2 = 5**

தினந்தோறும் காலந்தாழ்த்தி வகுப்பிற்கு வருவதனை வழக்கமாகக் கொண்டிருந்தான் குலோத்துங்கன். அதற்காக, ஆசிரியரிடம் பலமுறை தண்டனையும் பெற்றான். ஆனாலும், தன் வழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஒருநாள் தாமதமாக வந்த குலோத்துங்கன் ஆசிரியர் கவனிக்காதபோது அருகில் இருந்த மாறனின் அருகில் அமர்ந்து கொண்டான். “நீ செய்வது தறான செயல் ஆசிரியரிடம் அனுமதி பெற்று உன் இடத்திற்குச் செல்” என்று மாறன் அறிவுறுத்தினான். ‘நீ உன் வேலையைப் பார் எல்லாம் எனக்குத் தெரியும்’, என்று குலோத்துங்கன் முறைத்தவுடன் அமைதியாக இருந்துவிட்டான் மாறன்.அந்த நேரம் ஆசிரியரும் கனித்துவிட்டார்............?

(i) ஆசிரியராக , நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

(ii) மாறனாக , நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

(iii) குலோத்துங்கனாக, நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

**(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து வினாக்களுக்கு நும் கருத்தை எழுதுக.**

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவான். ஆனால், அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்யவேண்டு மென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார்.தனிப்படிப்புச் சொல்லித் தருபவரின் பழகுந்தன்மை அவனுக்குப் பிடிக்கவில்லை.வீட்டில் சொன்னால் தனிப்படிப்பிற்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

1) பாண்டியன் தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான்?
2) நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

**பிரிவு - IV**

**(மதிப்பெண் : 20)**

**பகுதி -1**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 10**

அனுப்புனர்=1
பெறுநர்=1
விளி=1
செய்தி=4
இடம்,தேதி=1
இப்படிக்கு---கையொப்பம் =1
உறைமேல் முகவரி=1

40.(அ) நும் ஊருக்கு தெருவிளக்கு வசதி செய்து தரவேண்டி மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் வரைக.

(அல்லது)

முகவரி, இடம்,தேதி =1
விளி=1
செய்தி=6
இப்படிக்கு ----- கையொப்பம்=1
உறைமேல் முகவரி=1

(ஆ) வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக 'அண்ணா விருது' பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**பகுதி -2**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதி , தலைப்பு ஒன்று தருக. 10**

தலைப்பு--→1
முன்னுரை--→1
பத்தி பிரிப்பு-→1
உட்தலைப்பு-→1
செய்தி--→5
முடிவுரை--→1

41. (அ) அன்பின் தோற்றம் - அழகான பெற்றோர் - அன்றாட வளர்ச்சியில் அறிவுச் சுரங்கம் - அன்னை தந்தை சொல் கேட்போம்- அகிலம் போற்ற வாழ்வோம்- வரலாற்றில் இடம் பிடிப்போம். (அல்லது)

(ஆ) பாரதியார் - பிறப்பும் இளமையும் - விடுதலை வேட்கை - தேசியக் கவிஞர் - முன்னறி புலவர் - சமுதாயத் தொண்டு.